காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை





1400 கோடி

மலர் 1   18—10—64   இதழ

ஆம்! அமெரிக்காவிடமிருந்து 1956-ம் ஆண்டிலிருந்து இதுவரை வாங்கியுள்ள உணவுப் பொருளின் விலை, 1400 கோடி ரூபாய்!!

இது முடிவாகிவிட்ட கணக்கு அல்ல—மேலும் உணவுப் பொருள் பெற்றுக்கொண்டிருக்கிறோம் — குறைந்தது இன்னும் பத்து ஆண்டுகளுக்கு இறக்குமதி செய்தாக வேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர் —அதற்கான தொகையையும் இந்த 1400 கோடியுடன் கூட்டியாக வேண்டும்.

இந்தியா விவசாய நாடு—ஆனை கட்டிப் போரடித்தார்கள் என்று கவி பாடுகிறார்கள்—நூற்றுக்கு எண்பது பேர் விவசாயிகள் என்கிறோம். இந்த விவசாய நாட்டுக்கு, அணுக்குண்டு தயாரிப்பதிலிருந்து சந்திர மண்டலம் செல்வது வரையில், விஞ்ஞானத்தை வளர்த்துக் கொண்டு தொழில் மயமாகி உள்ள நாடான அமெரிக்காவிலிருந்து இதுவரையில் 1400 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருளை, இறக்குமதி செய்திருக்கிறோம்.

பெரிய பெரிய அணைகள், தேக்கங்கள் கட்டப்பட்டன.

உரத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

நவீன யந்திரத்தின் துணை பெறப்பட்டது.

மின்சாரத்தின் துணைகொண்டு நீர்ப்பாசன முறை செம்மைப்படுத்தப்பட்டது.

புதிய புதிய கட்டாந் தரைகள் கழனிகளாக்கப்பட்டன.

விளைச்சலின் அளவு அதிகமாக்கப்பட்டது.

இவ்வளவுக்கும் பிறகு அமெரிக்காவிலிருந்து 1400-கோடி ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பண்டத்தை-கோதுமை-அரிசி-இறக்குமதி செய்திருக்கிறோம்; இனியும் செய்யப்போகிறோம் என்று காங்கிரஸ் அரசு கூறுகிறது.

இது சகஜம்—எத்தனையோ நாடுகளில் உணவுப் பொருள் உற்பத்தியில் நெருக்கடி இருக்கிறது—உணவுப் பொருள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது—அதுபோல் இங்கு—இதற்கு வெட்கப்படத் தேவையில்லை என்று சிற்சில வேளைகளில், சிரம் தாழ்த்தி கரம் பற்றிக்கொண்டு சென்றவர்கள் உரத்த குரலிற் பேசுவதாக அறிகிறோம். வியப்படையவில்லை. ஏற்றுக்கொண்ட வேலையைத் திறமையாகச் செய்திடும் முறை அது. ஆனால் வேறு பல இடங்களில், முழுக்க முழுக்க விவசாய நாடாக உள்ளவைகள், அந்தத் துறையிலேயே இத்தனை தோல்வி கண்டதாகத் தகவல் இல்லை. அங்கனம் சில நாடுகள் உள்ளன என்று வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும், அங்கெல்லாம் இருப்பது தான் இங்கும் என்று கூறுதல், பொருளும் பொறுத்தமும் அற்றதாகும். அவ்விதம் உள்ள நாடுகளிலே, அந்த நாட்டு ஆட்சி முறையைக் கண்டிக்கும் திராணியற்றுப் போய் அனைவருமே வாயடைத்துப் போய் விடவுமில்லை. இங்கு நாம், ஆட்சியில் உள்ளவர்களை, விவசாயத் துறையில் விளைவித்த வேதனை தரும் தோல்விக்காகக் கண்டிப்பது போலவேதான், அந்த நாடுகளிலே உள்ள முற்போக்காளர்கள் கண்டித்தபடி உள்ளனர். எல்லோருமேவா எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும், இழுப்பார்க்குப் பெண்டாகவும், தொட்டால் துவள்வோராகவும் ஆகிவிடுகிறார்கள்? இல்லை! இல்லை! இதயத்தை விற்றுவிட ஒருப்படாதவர்கள் உள்ளனர். அவர்கள் கண்டனத்தை வெளியிடுகின்றனர், ஜனநாயக முறை உள்ள இடங்களில்.

என்னமோ, பிறநாடுகளில் உணவுப் பற்றுக்குறை இருக்கும்போது அந்த நாட்டிலே எதிர்ப்பே இருப்பதில்லை என்பதுபோலவும், இங்கு மட்டுந்தான் எதிர்ப்பு இருப்பதுபோலவும், எண்ணிக்கொண்டு பேச முற்படுவது, ஏமாளித்தனம். நமது வயிற்றிலேயே ஒருபுறம் இருப்பதுதான் மலம்! அது ஒவ்வொருவரிடமும் உள்ளது தான் என்று கூறிக்கொண்டு, மலத்தைக் கண்டால் அருவருப்பதா, மூக்கைப் பிடித்துக்கொள்வதா என்று கேட்டிடும் அறிவாளர்களை என்ன சொல்லிப் புகழ்வது என்றே புரியவில்லை! நாம் தவறு தெரியுமிடத்து, தவறு என்றுகூறிக் கண்டிக்கிறோம் — காரணம் நாம் தயவு நாடிடும் நிலையில் இல்லை—தங்கத் தராசிலிட்டுத் தந்திடினும் எட்டிக்கொட்டையை உட்கொள்ள மறுக்கிறோம்.

சிலருக்கு சர்க்கார் முத்திரையிட்டுத் தரப்படும் சரக்கு புழுத்தலெனினும் பிடித்துவிடுகிறது. இயல்பு! இயல்பா? செச்சே! எதிர்பார்த்து, ஏற்றுக்கொள்ளும், தந்திரம்! ஒருவகையில் புத்திசாலித்தனம்! பிழைக்கும் வழி.

பின்னணிகள்தான் இவ்விதம் பேச முற்படுகின்றனவே தவிர, நேரு பண்டிதர், சமயம் கிடைக்கும் போதெல்லாம், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் பெறுவது, வெட்கப்படத்தக்கது, வேதனை மூட்டத்தக்கது என்று பேசத் தவறியதில்லை. அவருக்கு உறுத்திக்கொண்டுதான் இருந்தது—அடியார் கூட்டத்தினருக்குத்தான், அதனால் என்ன? என்ற மனப் போக்கு இருக்கிறது. அடியார் கூட்டத்தினர் என்பதற்கு தனி இயல்பு உண்டல்லவா! அது இது.

அவ்விதமானால், நாட்டு மக்களைப் பட்டினி போடுவதா, சாகச் சொல்வதா, வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருள் வரவழைக்காமல் இருந்துவிடுவதா என்று கேட்பவர்கள் உண்டு. நாம் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்தாகிலும், மக்களைச் சாகவிடாமல் காத்திட வேண்டும் என்ற அரிச்சுவடியை அறியாதவர்கள் அல்ல. இந்த நிலைமையில், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் வரவழைத்தாக வேண்டும்-தந்துதவுகின்ற நாட்டவர்க்கும் நன்றி கூறிக்கொள்கிறோம்.

ஆனால் அதேபோது நாட்டு மக்களுக்கு இதனை எடுத்துக் காட்டுகிறோம் — ஒரு விவசாய நாட்டை, இத்தனை ஆண்டுகளாக, ஆயிரக்கணக்கான கோடிகளைச் செலவிட்டு ஆண்டுகொண்டு வரும் காங்கிரஸ் கட்சி, இதுவரை 1400 கோடி ரூபாய் உணவுப்பொருளை அமெரிக்காவிலிருந்து வரவழைத்திருக்கிறது. என்பது எதனைக் காட்டுகிறது? ஆட்சி, விவசாயத் துறையில் தோல்வி தொடர்ந்து அடைவதைக் காட்டவில்லையா, இந்த ஆட்சியின் அவலட்சணப் போக்கினால் அல்லவா, 1400 கோடி ரூபாய்க்கு உணவுப் பொருள் வாங்க வேண்டிய வேதனையான நிலைமை ஏற்பட்டது. இதற்காக, இந்த ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் உங்களிடம் மன்னிப்புக் கேட்டார்களா? இத்தகையவர்களை மீண்டும் மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது நாட்டுக்கு நல்லதா, யோசித்துப் பாருங்கள் என்று கூறுகிறோம். இதற்கா, துடிதுடித்துப் பதைபதைத்து, பேன் இல்லாத தலை உண்டா, குப்பை இல்லாத தோட்டம் உண்டா, சேறு இல்லாத குளம் உண்டா, மலம் வைத்திராத மனிதன் உண்டா என்று பேசுவது?

வேளைக்கு மூன்றுபடி பால் தரும் என்று எண்ணி வாங்கி வந்த பசுவின் கன்றுக்கு பால் வாங்கி ஊட்ட, பக்கத்துத் தெருவில் எருமைப்பால் வாங்கிடச் செல்பவனை, "இவனன்றோ ஆற்றல்மிக்கோன்! இவர்போன்றோர் அன்றோ நாட்டின் நாயகராதல்வேண்டும்!" என்று கொண்டாடுவார்கள்!

இத்தனை ஆண்டு ஆட்சிக்குப்பிறகும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் மாவிலை செருகி உள்ள மனைக்கெல்லாம் சென்று, ஒருவேளை! ஒருகளம்! என்று கேட்டிடும் போக்கினன் நிலையிலா, ஐயா! கோதுமை! ஐயா! அரிசி!! என்று பார்க்கும் பக்கமெல்லாம் கேட்டபடி இருந்து வருவது? இது, ஆட்சித் திறமைக்குச் சான்று!!

இதனைத்தான் நாம் கேட்கிறோம்; கம்யூனிஸ்டுகள் கேட்கிறார்கள்; சோஷியலிஸ்டுகள் கேட்கிறார்கள்; சொரணை உள்ளவர்களெல்லாம் கேட்கிறார்கள்.

கவனமிருக்கட்டும், 1400 கோடி ரூபாய்!

மேலும் பல கோடி ரூபாய் கொட்டித்தரவேண்டும்; இன்னும் குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு! இங்கோ கங்கையும் யமுனையும், பிரம்மபுத்திராவும், கோதாவரி கிருஷ்ணாவும், காவேரி தென்பெண்ணையும், வைகையும் பிறவும் ஓடிக்கொண்டுள்ளன! கோழி கூவாமுன் எழுந்திருந்து கோட்டான் கூவும்வரை பாடுபட்டுவிட்டு, ஒட்டியவயிற்றுடன் உள்ள உழவர்கள் நூற்றுக்கு எண்பது பேர்!! இந்த நாட்டில், உணவுப்பஞ்சம்! யாருடைய குற்றம்? குற்றவாளிகளைக் கூண்டிலேற்றத் தயக்கம் ஏன்? கொற்றவர்களே! கேளுங்கள் என்று மக்களிடம் முறையிடுகிறோம். தவறா? முறை அல்லவா? புரிகிறது, கேட்கிறோம்!

*

திருவாளர்களின் திருப்பார்வைக்கு!

முறையான ஆட்சி! நெறியான ஆட்சி! என்று சிந்து பாடிடும் சீலர்காள்! கேண்மின்! இந்த நாட்டிலே, சமூகத்தில், ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், பிற்படுத்தப்பட்டு, உயர் ஜாதியினரால் கொடுமைப் படுத்தப்பட்டு, கல்வியில் முன்னேற்றம் காணமல், உத்தியோகத் துறையில் உயர்வு பெறுமல், பொருளாதாரத் துறையில் கடைசி படிக்கட்டுக்குத் தள்ளப் பட்டுக் கிடக்கும், பிற்படுத்தப்பட்டோர்—அல்லது பின் தங்கியோர்—பலப் பல கோடி மக்கள் உள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தனிச் சலுகைகள் அளித்து, கனிவான அக்கரை காட்டி, கல்வி போன்ற துறைகளிலே கைதூக்கிவிட்டு, உயர் வகுப்பினருடன் ஒன்றாக இருந்திடத்தக்க நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் அறமாகும்.

அதன்படி சில பல சலுகைகளை பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சர்க்கார் செய்துகொண்டு வரலாயிற்று.

இப்போது இந்தத் தனிச் சலுகைகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தரத் தேவையில்லை என்ற முடிவுக்குச் சர்க்கார் வந்துவிட்டதாம்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று எவரும் இல்லை; எல்லோரும் முன்னேற்றமடைந்துவிட்டனர் என்ற நிலை பிறந்துவிட்டதோ? இல்லை! என்றாலும் இனி, தனிச் சலுகைகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தரப்போவதில்லை என்று தீர்மானமாகி விட்டதாம்.

முக்குலத்தோர், வன்னியர், செங்குந்தர் எனும் இன்னோரன்ன பிறர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். அவர்கள், தனிச் சலுகைகள் காரணமாக, சிறிதளவு பச்சென்று வளரத் தொடங்கினர்; இது பொறுக்கவில்லை அரசுக்கு; இனிச் சலுகை இல்லை என்று அறைகிறது.

தமிழக அரசிலே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பாதுகாப்பாளர்கள் என்ற முறையில் அமைச்சர்கள் உள்ளனர். அவர்களின் திருப்பார்வையில் இந்நிலை பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகப் பிறந்திருந்த போதிலும் அவர்களைப் பொறுத்தமட்டில் 'முன்னேற்ற' வகுப்பினராகிவிட்டனர் —மந்திரி ஜாதி மதிப்பான ஜாதி அல்லவா, அதனால்!! அவர்கள் பிறந்த சமூகம் எந்த நிலையில் உள்ளது? கல்வி எந்த அளவு பரவி இருக்கிறது? தொழில் துறையிலும் உத்தியோகத் துறையிலும் அவர்களின் இடம் என்ன? விவரம் வேதனை அளிக்கும். குறிப்பிடத்தக்க விதமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

எனினும், நோய் தீரா முன்பு மருத்துவ மனையிலிருந்து விரட்டி விடுவதுபோல, பிற்படுத்தப்பட்ட நிலையினின்றும் விடுபட எடுத்துக்கொண்ட முயற்சி முழுப் பயனைத் தருவதற்குள்ளாகவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இனித் தனிச் சலுகை காட்ட முடியாது என்று காங்கிரஸ் அரசு கூறுகிறது. கேளாக் காதினராக உள்ளனர் பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள், பிரமுகர்கள். ஏன்? கேள்வி கேட்டால், தமக்குக் கிடைத்தது பறிக்கப்பட்டுப் போய்விடுமோ என்ற கிலி.

ஆனால், ஒருவர் துணிந்து பாராளுமன்றத்தில், இந்தப் போக்கை மிக வன்மையாகக் கண்டித்துள்ளார் என்பதனைக் காண மகிழ்ச்சிகொள்கிறோம்.

டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் என்பார்—கடமை மறவாமல்—காங்கிரஸ்காரர் என்றால் கண்ணை மூடிக் கொண்டு காங்கிரஸ் அரசு செய்வதை எல்லாம் ஒப்புக் கொண்டு கட்டியங் கூறுவது அல்ல என்ற துணிவுடன், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளித்துவந்த சலுகைகளை நிறுத்தி விடுவதனைக் கண்டித்துப் பேசினார்.

குறைந்த பட்ச அளவுக்காகிலும் கல்வித் துறையில் முன்னேற்றம் கண்டாலொழிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூகத்தில் மற்றவர்களுடன் சரிசமமான நிலை பெற்று வாழ முடியாது என்பதனை தேஷ்முக் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சலுகைகள் தருவதை நிறுத்திவிட்ட போக்கு 'அவமானகரமானது' என்று கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

அரசியல் சட்டமே கூறி இருக்கிறது, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நிலைமைபற்றி ஆராய்ந்து, அவர்களின் முன்னேற்றத்துக்கான வழி கண்டாக வேண்டும் என்று.

மிகுந்த வற்புறுத்தலுக்குப் பிறகே காங்கிரஸ் அரசு, இதற்கான ஒரு விசாரணைக்குழு அமைத்தது.

ஒன்பதரை ஆண்டுகளுக்குப் பிறகே அந்தக் குழுவின் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அதிலும், அறிக்கை முழுவதும் அல்ல. சில பகுதிகள் வெளியிடப்படவுமில்லை.

விசாரணைக்குழு சில சிபாரிசுகளைச் செய்தது; ஆனால் அந்தக் குழுவின் தலைவர் அந்தச் சிபாரிசுகளை நாசமாக்கத்தக்கவிதமாக, அறிக்கை கொடுத்துவிட்டார்.

தேஷ்முக் இதனை, ஏதோ மர்மமான போக்காக இருக்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமை அவர்கள் தாமாக, உயர்வகுப்பினருடன் போட்டியிட்டுக்கொண்டு முன்னேற்றம் காணக்கூடியதாக இல்லை. இந்நிலையில், அவர்கள் பிரச்சினையை விசாரித்து அறிய ஒன்பதரை ஆண்டுகளையா ஓட்டுவது? நியாயமா? பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடம் துளியேனும் அன்பும்அக்கறையும் கொண்டிருந்தால், இப்படியா நடைபெறும்? விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை அழித்துவிட்டு, கண்ணை அவித்துக் காட்டிலே விடுவதுபோல, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனிச் சலுகைகள் இனிக்கிடையாது என்று கூறிவிடுவது? இந்தக் கொடுமையைக் காங்கிரஸ் அரசு செய்திருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தலைவர்கள் என்று காரணம் காட்டி, துரைத்தனத்தில் பதவிபெற்று பிறகு பராக்குக் கூறிடுவோராக மாறிவிட்ட திருவாளர்களின் திருப்பார்வைக்கு இதனை வைக்கிறோம். என்ன செய்யப் போகிறார்கள் இந்தத் திருவாளர்கள்? பஞ்சாப் ராவ் தேஷ்முக்போலக் கண்டனக்கனல் கிளப்பி, சர்க்காரின் இந்த முறையற்ற போக்கைப் பொசுக்கப் போகின்றார்களா, அல்லது சமது வகுப்பினைக் காட்டிக் கொடுத்து, கைத்தாளமிட்டுக் கிடக்கப்போகிறார்களா? பிற்படுத்தப்பட்ட வகுப்பு இளைஞர்கள், எழுச்சிபெற்று, இந்நிலையை மாற்றிட முனைந்திட வேண்டும் — துணிவுடன்—தூய நோக்குடன்.

★

கைதி எண் 6342



தம்பி!

26—2—64

நீண்ட நாட்களுக்குப் பிறகு, விட்ட இடத்திலிருந்து எழுதத் தொடங்குகிறேன் — தொடர்ந்து எழுதுவதா வேண்டாமா என்று சில நாட்கள் எண்ணியபடி இருந்தேன்—ஒரு முடிவுக்குவர இயலாத நிலையில். எழுதும் போதே, அடக்கிவைத்திருக்கும் வேதனை பீறிட்டுக் கொண்டு வெளிவந்து என்னைச் செயலற்றவனாக்கி விடும் என்ற அச்சம் என்னைப் பிடித்து உலுக்கியபடி இருக்கிறது. என் இயல்பையே கருக்கிவிடத்தக்க பெருநெருப்பு என் இதயத்திலே நுழைந்தது. எத்துணை சமாதானங்கள், தத்துவ விளக்கங்கள், உலகியல் நிலைமைகள் தெரிந்திருந்தாலும், ஒவ்வொருவருக்கும் தாங்கிக்கொள்ள முடியாத துக்கம் மூண்டிடும் சம்பவம் நேரிடும்போது, அவர்கள் தமது வேதனையைத் துடைத்துக்கொள்ள முடிவதில்லை. கவிதைகள், கதைகள், விளக்கங்கள், மேற்கோள்கள் எத்துணை எத்துணை எடுத்துக் கூறப்பட்டபோதிலும், அவை யாவும் வெந்த புண்ணின் மீது தடவப்படும், காரமருந்தாகிறது—எரிச்சலை அதிகமாக்கிவிடுகிறது. இறுதியில் புண்ணை ஆற்ற, காரமருந்து பயன்படும் என்றபோதிலும், துவக்கத்தில், எரிச்சல் அதிகப்படத்தான் செய்யும். என் சிற்றன்னையை நான் இழந்தேன். எனக்கே ஐம்பத்து ஐந்து வயதாகிறது என்றால், என்னை ஆளாக்கிவிட்ட என் சிற்றன்னைக்கு வயது, எழுபது அளவுக்கு இருக்கவேண்டுமே — அந்த வயதிலே அவர்கள் மறைந்ததை எண்ணி அதிகமான வேதனைப் படலாமா என்று சிலர் சொல்லக்கூடும்; பலர் எண்ணிக் கொள்ளக்கூடும். வயது என்ன என்பதல்ல பிரச்சினை —அந்த இழப்பு என் இதயத்தில் எத்தகைய வேதனையை மூட்டிவிட்டது என்பதுதான் பிரச்சினை. என்றால், எத்தனை சமாதானங்களைத் தேடித் தேடித் தருவித்துக்கொண்டாலும், தாங்கிக்கொள்ளக்கூடியதாக அந்த வேதனை அமையவில்லை. நான் சிறைப்பட்டிருக்கும் நேரம், அவர்கள் வீட்டில் மரணத்தின் பிடியில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். என்னை வாழ்த்தி வழி அனுப்பிவைத்த, என் சிற்றன்னை—என் வாழ்வை எனக்காக அமைத்துக்கொடுத்த என் வழிகாட்டி — எனக்காகவே, உயிர் ஊசலாடும் நிலையில், வலிவெல்லாம் இழந்து, நோயினைத் தாங்கிக்கொண்டு, வாழ்ந்து வந்த அந்த அன்புத்தாய், நான் விடுதலையாகி வீடு திரும்புவதைத் தன் விழிகளால் கண்டு, மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில் என்னை வரவேற்க எண்ணிக் கொண்டிருந்த என் சிற்றன்னை, பேச்சிழந்து உயிரை இழந்துகொண்டிருக்கிறார்கள் காஞ்சீபுரத்தில், வீட்டில். நான், அவர்கள் பக்கம் இருந்து பணியாற்றிக்கொண்டில்லை. எனக்கு ஒரு சிறு தொல்லை, மிகச்சாதாரணமான நோய் என்றாலும், அதைக் காண இயலாமல், கலக்கமடைந்து, எனக்கான பணியிலே தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்த என் சிற்றன்னையின் கடைசி நாட்களில், அவர்களுக்குத் துளியும் பயனற்றவனாக்கப் பட்டுவிட்டேன். நான் அவர்களைக் காணச் சென்ற போதே, அவர்கள் நினைவிழந்து கிடந்தார்கள் — என் குரலொலி செவிபுகவில்லை. என்னைக்காண அந்தக் கண்கள் திறக்கவில்லை, அவர்கள் மரணத்திற்கான பயணத்திலே இறங்கிவிட்டார்கள்—என் கண்ணீரைக் கொண்டுகூட அவர்களை அந்தப் பயணத்திலிருந்து திரும்பிவிடச் செய்ய இயலாது என்பது, கண்டதும் புரிந்துவிட்டது. புரிந்து? உணர்ச்சிகள், வாதங்களால் அடக்கப்படக்கூடியனவா. அவர்களுக்கு வந்துற்றிருப்பது, தீரக்கூடிய நோயல்ல — அதனை ஒரு நோய் என்றுகூடக் கூறுவதற்கில்லை — மூளைக் குழாய்கள் சேதமாகிவிட்டன — தேக அமைப்பிலேயே ஒரு ஊறு நேரிட்டுவிட்டது — அதனைச் சரிப்படுத்த மருந்து கிடைக்காது என்பதனை நுண்ணறிவு படைத்த மருத்துவர்கள் கூறினார்கள் — இப்போது எனக்கு அது புரிகிறது — அன்று எனக்கு, இந்த மருத்துவர்களுக்குத் துளியும் பச்சாதாப உணர்ச்சியே கிடையாதா, உயிர் போய்க்கொண்டிருக்கிறது என் சிற்றன்னைக்கு, இவர்கள், என்னிடம் ‘மருத்துவப் புலமை’ பேசுகிறார்களே, என்று ஆத்திர ஆத்திரமாக வந்தது. என் மகன் பரிமளத்திடம்தான் கோபித்துக்கொள்ள முடிந்தது, “மனித பாஷையில் பேசுங்கள் வெறும் மருத்துவ மொழியில் பேசுகிறீர்களே!” என்று சொன்னேன், அவன் என்னிடம் அந்த நிலைமையை விளக்கிக்கொண்டிருந்தபோது. என் மனநிலை அறிந்து மருத்துவர்கள், மிகுந்த அக்கரையுடன், அந்த நிலையில், என்னென்ன செய்துபார்க்க முடியுமோ அவ்வளவும் செய்தபடி இருந்

தனர் — என் சிற்றன்னையோ இறுதிப் பயணத்தில், மேலால் மேலால் சென்றபடி இருந்தார்கள் — நான் குமுறுகிறேன் பக்கம் நின்று, அவர்கள் நெடுந்தூரம் சென்றுவிட்டேன் மகனே! இனியும் காத்துக்கொண்டிராதே! நான் திரும்புவதாக இல்லை! திரும்பப்போவதில்லை! — என்று கூறுமற் கூறிக்கொண்டு, மரணப் படுக்கையிலே கிடந்தார்கள். பல நாட்கள் பயணம் செய்துவிட்டு, வீடு திரும்புவேன், ஒரு பொய்க்கோபப் பொலிவுடன் முகம் இருக்கும்-எதிரில் நிற்பேன், இரண்டோர் வார்த்தை பேசுவேன், ஓர் புன்னகை மலரும்— மன்னித்துவிட்டேன் மகனே! என்று அந்தப் புன்னகை அறிவிக்கும். அந்த முகத்தைக் காண்கிறேன், மரணத்தின் முத்திரை படிந்துவிட்டிருக்கிறது! எப்படித் தாங்கிக்கொள்ள முடியும். நான் வந்திருக்கிறேன், தொத்தா! இதோ வந்துவிட்டேன் தொத்தா! என்று என் கண்ணீர் பேசுகிறது, அவர்கள் அதைக் கேட்கவுமில்லை, என்னைக் காணவுமில்லை, தன்னை மரணத்திடம் ஒப்படைத்துவிட்டார்கள் — இத்தனை காலந்தான் உனக்காக ஓயாது உழைத்து வந்தேனே போதாதா, என் இறுதிப் பயணத்திலே ஈடுபட்டு விட்ட நான் இனியும் இருந்து உன்னைக் கவனித்துக் கொள்ளவா?—நடவாது மகனே! நடவாது! நான் போகிறேன், உன்னை விட்டு விட்டு! என்னை இனியும் எதிர்பார்க்காதே!!— என்றல்லவா, நிலைமை தெரிவிக்கிறது. ஆறு நாட்கள் அருகேயே இருந்தேன்—இரவும் பகலும்—ஊண் உறக்கம் மறந்து—அழுத கண்களுடன்—பாதிப் பயணத்தில் என் நினைவு வந்து, திரும்பி வந்து விடுவார்கள் என்ற எண்ணத்தில்-என் எண்ணத்தில் மண் விழுந்தது; இதயத்தில் நெருப்பு விழுந்தது; யார், மறுபடி எழுந்து நடமாடி என்னைக் களிப்படையச் செய்விப்பார்கள் என்று எண்ணினேனோ அந்த என் 'தொத்தா' தீயாலான படுக்கையில் கிடத்தப்பட்டு என் கண்ணெதிரே, சாம்பலாக்கப்பட்டுக் கொண்டிருக்கும், கொடிய காட்சியைத் தான் நான் காணவேண்டி நேரிட்டது. அவர்கள் மனம் நோகும்படி நான் நடந்துகொண்டதே இல்லை—இத்தனை வருஷங்களில், நான் ஏதாகிலும் சிறு சிறு தவறுகளைச் செய்து, அவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி விட்டிருந்திருந்தால், அவற்றினுக்கான தண்டனையைச் சிறுகச் சிறுக, அப்போதைக்கப்போது எனக்கு அவர்கள் தரவில்லை, மொத்தமாக, ஒரே நாள், ஒரே தண்டனையாகத் தருவதுபோல், என் கண்ணெதிரே, வெந்தழலில் கிடந்தார்கள்—பார் மகனே! பார்! படுமகனே படு! என்று கூறுவது போலிருந்தது அந்தக் கொடுமை. சே! அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அந்த நேரத்தில் அவர்கள் உயிர்பெற்று எழுந்தாலும், முதலில் மகனே! மிகவும் பயந்துவிட்டாயா! மிகவும் வேதனைப் பட்டாயா! என்றுதான் கேட்டிருந்திருப்பார்கள். அவர்கள், எனக்கு வேதனை மூளக்கூடாதே என்பதற்காகவே மரணத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள் — சில ஆண்டுகளாகவே- அவர்களால் முடிந்தவரையில் போராடிப் பார்த்தார்கள்-மரணத்தின் பிடியின் வலிமை கடைசியில் அவர்களைக் கொண்டு சென்றுவிட்டது.

மூளைக் குழாய்கள் சேதமடையும்படியான 'அதிர்ச்சி' அவர்கள் ஏன் கொள்ள நேரிட்டது-நான் சிறைப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது ஏற்படாத அதிர்ச்சி, நான் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனை அனுப்பப்பட்டதைக் கேள்விப்பட்டபோது ஏற்படாத 'அதிர்ச்சி' நான் நலமாக இருக்கிறேன் என்ற செய்தியை ஒவ்வொரு நாளும், மருத்துவமனையில் என்னை வந்து பார்த்துவிட்டுச் சென்ற, ராணியும், பரிமளமும், தொலைபேசிமூலம் கூறக்கேட்டு அறிந்துகொண்டிருந்தவர்களுக்கு, திடிலென, ஒரு காரணமுமற்று, 'அதிர்ச்சி' ஏற்படுவானேன். விளங்கவில்லை. விளக்கிய மருத்துவரும் இல்லை. பார்ப்பதற்கு எப்போதும் போலிருந்த நிலையில், எங்கே அவன். அவனைப் பார்க்கவேண்டுமே என்று கேட்டார்களாம், என் அன்னையைப் பார்த்து. என்னைப் பார்க்கவேண்டுமென்ற ஒரு அவா, அதிர்ச்சியாக வளர்ந்துவிட்டது. நான் சிறைப்பட்டு, மருத்துவ மனையில் இருக்கிறேன் என்பதனை மறந்து, நான் ஊரிலே இருப்பதாகவே நினைத்துக்கொண்டு, எங்கே அவன்? என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் போலக் காணப்பட்ட நிலையில் பேசிய கடைசீ வார்த்தைகளை அவைதாம்! பிறகு அவர்கள் படுத்த படுக்கையானார்கள், பயணத்துக்குத் தயாராகி விட்டிருக்கிறார்கள்.

என்னைப் பற்றியே, ஏனோ திடிலென எண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்கள், அந்த எண்ணம், வேகமாக, பலமாக, வளர்ந்திருக்கிறது, அதிர்ச்சியாகி விட்டிருக்கிறது, அந்த அதிர்ச்சி, மூளைக் குழாய்களைச் சேதப்படுத்தி விட்டிருக்கிறது, இறுதியைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டிருக்கிறது. இத்தனை நாட்களுக்குப் பிறகு, இத்தகைய விளக்கம் நினைக்க முடிகிறது. நான் கண்ட அன்று! ஐயோ! நினைக்கவே பயமாக இருக்கிறது. ஒருவிதத்தில் பார்க்கும்போது, நான் சிறைப்பட்டது, அவர்கள் மறைந்ததற்கு, ஒரு காரணமாக அமைந்துவிட்டது என்றுதான்சொல்லவேண்டும். நான் பலமுறை சிறை சென்றதை அவர்கள் தாங்கிக்கொண்டவர்கள், ஆகவே இம்முறை நான் சிறை செல்வது அவர்களுக்கு, வருத்தத்தைக் கொடுக்கும் என்றாலும், விபத்தைக் கொடுக்காது என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன். ஆனால் அவர்களோ, இத்தனை முறை தாங்கிக் கொண்டேன்-இந்த முறை முடியாது- தாங்கிக்கொள்ளும் வலிவை இழந்துவிட்டேன்-என்று தெரிவிப்பதுபோல, என்னைவிட்டுப் போய்விட்டார்கள். எனக்கு என் சிற்றன்னை, எத்தனையோ விதமான 'புத்தி மதி'களைக் கற்றுக் கொடுத்தது மட்டுமல்ல, வேதனையைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதனையும் சில ஆண்டுகளாகவே, எனக்கு எடுத்துக் கூறிக்கொண்டு

வந்தார்கள். சில ஆண்டுகளாகவே அவர்களுக்கு உடல் நலமில்லை—அடிக்கடி, 'பயப்படும்படியான' கட்டங்கள் ஏற்பட்டுவிடும் – அப்போது நான் மிக வேதனையில் ஆழ்ந்திருப்பேன்—அவர்கள் நல்ல நிலை அடைந்தவுடன், என்னிடம் கூறுவார்கள், "பைத்யமே! இந்த வய திலே எனக்கு ஏதாவது ஆகிவிட்டால், அதற்காக வேதனைப்பட்டுக்கொண்டிருக்கலாமா— தைரியத்துடன் இருக்கவேண்டாமா—ஆகவேண்டியவைகளை நடத்திவிட வேண்டாமா — அழுதுகொண்டிருக்கிருயே" — என்று சொல்லுவார்கள். ஆகவேண்டியவைகளை நடத்திவிட்டேன்! வேறு என்ன செய்யமுடிந்தது என்னல். என் உடலில் ஒரு துளிமாசுபடக்கூட பார்த்துச் சகித்துக் கொள்ளமாட்டார்கள் — அத்தகைய என் சிற்றன்னை யின் உடலுக்குத் தீ மூட்டினேன். எத்தனை கொடிய கரங்கள், எனக்கு இருப்பவை. சே! எப்போதுமே, மிகச் சுறுசுறுப்பான அறிவுத்திறமை அவர்களுக்கு உண்டு. அதிலும் சில ஆண்டுகளாக, அவர்கள் அரசியல் பிரச்சினைகளை, நுட்பமான அரசியல் பிரச்சினைகளை, மிக ஆராய்ந்து அறிந்துகொள்ளத் தலைப்பட்டார்கள். உடல் வலிவிழந்த நிலையில், வெளியே நடமாடுவது அவர்களுக்கு இயலாது போய்விடவே, தனது நேரத்தில் பெரும்பகுதியை, படிப்பதில் செலவழிக்கத் தொடங்கினர்கள்—நான் ஈடுபட்டுள்ள பிரச்சினைகளில் அக்கரை காட்டத் தொடங்கினர்கள். ஆதரவாகப் பேசத் தலைப்பட்டார்கள். இன்ன விஷயத்தை இன்னவிதத்தில் எடுத்துச் சொல்லவேண்டும் என்று எனக்குக் கூறுவதில் ஈடுபட்டார்கள். நான் எடுத்துக்கொள்ளும் முயற்சி நியாயமானது என்பதிலே அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டு, நமது கழக வளர்ச்சியிலே மிகுந்த அக்கரை காட்டி வரலானர்கள். நமது கழகத் தோழர்களில், மிகப் பெரும்பாலானவர்களை, அவர்கள் மிக நன்ருக அறிவார்கள். அந்தத் தோழர்கள், வீட்டுக்கு வருகிறபோது உபசரிப்பதில், உள்ளன்புகொண்டார்கள். அவர்களிடம் உள்ள பேரன்பு காரணமாக, அவர்களின் போக்கு, பேச்சு எதிலாவது குறை இருப்பது தெரிந்தால், கண்டிக்கக்கூடத் தயங்கினதில்லை.

அரசியல்பற்றியும், குறிப்பாக கழகப் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள், ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கில், பேசுவார்கள்—அதிலே மிகப் பெரிய பங்கு, அ. க. தங்கவேலருக்கு இருக்கும். ஒருவரும் கிடைக்காதபோது என் அன்னையிடம், 'விவாதிக்க' ஆரம்பித்துவிடுவார்கள்—அரசியல் காரணமாகவே மகன் வீடு தங்காது இருக்கிருன் என்ற துக்கம்கொண்டுள்ள என் தாய், தன் தங்கையும் அரசியல் பேசுவதுகேட்டு, மிகுந்த சங்கடமடைந்து, "நீ சும்மா இரு அம்மா!" என்று கூறுவார்கள். அப்போது, என் சிற்றன்னை, சிரிக்கும் சிரிப்பொலி இருக்கிறதே! இருந்ததே! — என்றல்லவா சொல்லவேண்டி வந்துவிட்டது. இருந்தார்கள்! இருந்தார்கள்!—என்று ஆகிவிட்டது.

என்னல் மட்டுமே, முழு அளவிலும் கூர்மையாகவும் உணரக்கூடிய வேதனைகுறித்து மேலும் எழுதி படிப்போர்களுக்கு ஒரு சங்கடத்தை உண்டாக்குவது அறமாகாது—ஆகவே இதுகுறித்து என் உள்ளத்தில் பொங்கி எழுந்திடும் எண்ணங்களை அடக்கிக்கொள்கிறேன். என்வேதனை மிகப் பெரிதாகவும் தனித்தன்மை கொண்டதாகவும் எழுந்ததற்கு மிக முக்கியமான காரணம், அந்த இழப்பு நான் துளியும் எதிர்பாராத முறையில், நேரத்தில் ஏற்பட்டதுதான்.

நான் என் சிற்றன்னை மரணப்படுக்கையில் இருப்பதைக் காண்பதற்குக் காஞ்சிபுரம் சென்ற நாளைக்கு, முன்மாலை கூட, ராணியும் பரிமளமும் என்னை மருத்துவமனையில் வந்துபார்த்தார்கள்—அப்போது, தொத்தாவுக்கு உடல்நிலை சரியாக இல்லை என்ற பேச்சே எழவில்லை — என்னிடம் சொல்லிக்கொண்டு, அவர்கள் காஞ்சிபுரம் போயிருக்கிருர்கள். அன்றிரவு தொத்தாவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு, படுத்துவிட்டார்கள். மறு நாள் காலை, 'முரசொலி'யில் செய்திபார்த்து, நான் திகைத்துப்போனேன் — எப்படி காஞ்சிபுரத்துடன் தொடர்புகொள்ளமுடியும்—நானே மருத்துவமனையில்—நோயாளியாக மட்டுமல்ல—கைதியாக — நான் இருந்த அறைக்கு எதிரிலே ஆறு போலீஸ்காரர்கள் காவல்—என்னிடம் அவர்கள் பேசவும்மாட்டார்கள்! என்ன செய்வது! இதை எண்ணி நான் திகைத்து உட்கார்ந்து கொண்டிருந்தேன். காலை மணி 10-இருக்கும், பரிமளம் வழக்கறிஞர் நாராயணசாமியுடன் உள்ளே வரக்கண்டேன்-ஒரு அற்பசந்தோஷம் கலந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது; தொத்தாவுக்கு ஆபத்தான நிலைமை என்ருல் பரிமளம் காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்டிருக்க மாட்டானே. பத்திரிகையில் மிகைப்படுத்திவிட்டார்கள் போல இருக்கிறது—ஆபத்து ஏதுமிராது என்று எண்ணிக்கொண்டு, சிறிதளவு மகிழ்ச்சியாகவே, "பரிமளம்! முரசொலியில் என்னமோ போட்டிருக்கிருர்களே தொத்தாபற்றி. என்ன?" என்று கேட்டேன். "ஆமாம்பா! அதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்; உங்களை அழைத்துக்கொண்டுபோக; உங்களைப் பார்த்தால் ஒருசமயம் அவர்களுக்கு நினைவு திரும்பக்கூடும்" என்ருன். "நான் வருவது என்ருல், அமைச்சர் அனுமதி கிடைக்கவேண்டுமே" என்று கூறிமுடிப்பதற்குள், "நான் வக்கீலுடன், முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பார்த்துப் பேசினேன்—பரோலில் போக அனுமதி கொடுக்கும்படி அதிகாரிகட்குக் கூறிவிட்டார். அதிகாரிகளின் உத்திரவு பெறச்செல்கிறேன். அதற்குள் உங்களிடம் கூறிவிட்டுப்போகவந்தேன்" என்று சொல்லவே ஓரளவுக்கு தைரியம் பெற்றேன். மிகுந்த கூச்சமுள்ளவன் பரிமளம்; ஆனல் சில நிலைமைகள் ஏற்படும்போது, அதற்கு முன்பு இயல்பாக எழாத, திறமை, சுறுசுறுப்பு, துணிவு, தன்னம்பிக்கை, வினை செய்வகை யாவும் தன்னலே ஏற்பட்டுவிடும் என்ற பொதுவிதிபற்றி எனக்குத்தெரியும் — ஆனல் அதை

நான் விளக்கமாகப் புரிந்துகொண்டது, பரிமளம். அமைச்சரை அணுகி, எனக்குப் 'பரோல்' பெற்ற சம்பவத்தின்போதுதான். அன்று, கருணாநிதி, நடராசன், நெடுஞ்செழியன், இவர்கள் யாரும் சென்னையில் இல்லை. எவர் இருந்தால், 'பரோல்' பெறுவது இயலுமோ அவர்களில் ஒருவருடனும் தொடர்புகொள்ளும் நிலையில் நான் இல்லை. நானே கைதியாக இருக்கிறேன். இந்த நிலையில், வழக்கமாக உள்ள கூச்சத்தை உதறித்தள்ளிவிட்டு, பரிமளம், எனக்குப் 'பரோல்' கிடைக்க ஏற்பாடு செய்தது, உள்ளபடி, என் வாழ்நாளில், நான் மறக்க முடியாத சம்பவங்களில் ஒன்று.

அமைச்சர் குறிப்பிட்ட அதிகாரியின் உத்திரவைப் பெற்றுவர, பரிமளம் சென்றான், நான் மருத்துவ மனையில் காத்துக் கிடந்தேன்—ஒவ்வொரு விநாடியும் பல மணி நேரமாக, எனக்குத் தோன்றிற்று—மருத்துவர்கள் என் நிலையைப் பார்த்து, ஆபத்து ஒன்றும் இருக்காது பயம் வேண்டாம் என்று அன்புரை கூறினர்—என்மனம் ஒரு நிலை கொள்ளவில்லை! மணி ஆக ஆக என் மனம் குழம்பலாயிற்று.

அந்தச் சமயத்தில்தான் அமைச்சர் இராமையா அவர்கள் அங்குவந்தார்—பார்த்து ரொம்ப நாளாயிற்று —உடம்பு சரி இல்லை என்றார்கள்—பார்க்க வந்தேன் என்று சொன்னார். அவர் பார்த்தாக வேண்டிய 'நோயாளி' எவரேனும் மருத்துவ மனையில் இருந்திருக்கக்கூடும்—அவரைப் பார்க்க வந்தவர், நானும் மருத்துவ மனையில் இருப்பதால் என்னையும் பார்க்க வந்திருக்கிறார் என்று எண்ணிக்கொண்டேன்—ஒரு அமைச்சர் வந்து பார்த்து விசாரிக்க வேண்டிய நிலையில் உள்ள 'பிரமுகன்' அல்லவே நான். எப்படியோ ஒன்று வந்ததற்கு நன்றி கூறத்தான் வேண்டும். மிக்க அன்புடன் பேசினார்—என் கரத்தில் உள்ள வலியின் தன்மைபற்றி விசாரித்தறிந்தார்—கொஞ்சமும் தூக்கவே முடியாதிருந்த நிலையிலிருந்து, ஓரளவு தூக்கக்கூடிய நிலைக்கு, என் இடது கரம் வந்திருப்பதைச் சொன்னேன்—இந்த அளவுக்குக் குணம் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சியே, என்று என் திருப்தியைத் தெரிவித்தேன்—அவரோ, அதெல்லாம் இல்லை—முழுக் குணம் ஏற்பட வேண்டும்—அவசரம் வேண்டாம்—இருந்து குணப்படுத்திக்கொண்டு போங்கள் என்று கனிவுடன் பேசினார்—என் உடன் பிறந்தவர்போல் பேசுகிறாரே என்று நான் பெருமிதம் கொண்டேன்; தொத்தா விஷயம் சொல்லி, பரோலில் செல்ல ஏற்பாடு செய்ய, என் மகன் சென்றிருக்கிறான் என்றேன்; இதிலே என்ன சங்கடம் இருக்கிறது, கட்டாயம் பரோலில் விடுவார்கள்; இப்படிப்பட்ட ஆபத்து என்றால் விடாமலா இருப்பார்கள், நானும் முதலமைச்சரைக் கண்டால் சொல்லுகிறேன், என்று கூறினார். நான் சட்டசபையில் இருந்த காலத்தில்கூட, அமைச்சர் ராமையாவிடம் எனக்கு ஒரு தனியான நேசப்பான்மை உண்டு—அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக இருக்கும்போதே, நான் அவரை அறிந்தவன். அன்று அவர் என்னிடம் காட்டிய அன்பு, உள்ளபடி என் மனதுக்குப் பூங்காற்று போலிருந்தது. ஏன் அது பற்றி இவ்வளவு எழுதுகிறேன் என்றால், இவ்வளவு கனிவு காட்டிப் பேசிய அதே அமைச்சர் ராமைய்யா அவர்கள் என் நோய் பற்றியும், நான் மருத்துவ மனை சேர்ந்தது பற்றியும் கேவலமாகவும் கேலியாகவும் பொதுக்கூட்டத்திலே பேசியதாக சில தினங்களுக்குப் பிறகு இதழ்களில் வெளிவந்திருக்கக்கண்டேன்-திகைப்படைந்தேன்—இல்லை! இல்லை! மனிதர்களுக்குஎத்தகைய இயல்புகளெல்லாம் ஏற்படுகின்றன என்று எண்ணித் திடுக்கிட்டுப்போனேன். பத்திரிகையில் அந்தச் செய்தியைப் பார்க்கும்போது, என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவது போன்ற தீய குணங்களைச் சுட்டெரிக்கத் தக்க உயர்குணத் தலைவர் காந்தியாரின் கட்சியில், இப்படிப்பட்டவரும் இருக்க இடம் இருக்கிறதே என்று எண்ணி வருத்தப்பட்டேன். எவ்வளவு கனிவான பேச்சு என்னிடம்! எத்தனை தேவையற்ற, பயனற்ற, பொருளற்ற கேலிப்பேச்சு, மேடையில்! அரசியல் இந்த அளவுக்குத் தரங்கெட்ட துறையாகிவிடக் கூடாது. மணி நாலு-நான் விநாடிக்கு விநாடி வேதனை வளர்ந்துகொண்டிருக்கும் நிலையில், தவித்துக்கிடக்கிறேன் மருத்துவ மனையில்-பரிமளம் வந்து சேரவில்லை, பதறிப்போனேன். ஐந்துமணி சுமாருக்கு வந்தான். அன்று சர்க்கார் அலுவலகங்களுக்கு விடுமுறை — ஆகவே அமைச்சர் அளித்த 'வரம்' பழமாகவில்லை— எந்த அலுவலகமும் பணியாற்றவில்லை இது தெரிந்து இளைஞனாக இருப்பினும் பரிமளம், என்றுமில்லாத அறிவுத்திறனும் ஆற்றலும் கொண்டு, நேராக அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் இல்லத்தின் எதிரிலேயே சென்று நின்றுகொண்டானும். எங்கோ சென்றுவிட்டு, அவர் வீடு திரும்பி இருக்கிறார், இவன் எதிரே சென்று நின்று, இன்னும் பரோல் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறான்; உடனே அவர் அவனை உள்ளே அழைத்துச் சென்று, அவன் எதிரிலேயே, தொலைபேசி மூலம் பெரிய அதிகாரியிடம் தொடர்பு கொண்டு, உடனே பரோலுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும் என்பதைக்கூறி, இனி கிடைத்துவிடும், நீ சென்று உத்திரவைப் பெற்றுக்கொள் என்று பரிமளத்திடம் கூறி அனுப்பினார். அதன்படி, உத்திரவு பெற்றுக்கொண்டு, பரிமளம் வந்து சேர்ந்தான். அ பொ. அரசு மெத்தத் துணைபுரிந்திருக்கிறார். மிக்க பச்சாதாப உணர்ச்சியுடன் அமைச்சர் பக்தவத்சலம், நடந்துகொண்டதை நான் என்றும் மறக்க முடியாது. அவர் அமைச்சர் ராமைய்யாபோல கனிவாக என்னிடம் பேசியதில்லை; பரிமளம், என் மகன் என்பதும் அவருக்குத் தெரியாது.

வழக்கறிஞர் நாராயணசாமியை உடனழைத்துக் கொண்டு பரிமளமும் நானும் இரவு எட்டுமணிக்குக்

காஞ்சிபுரம் சென்றேம் — அன்றிலிருந்து ஆறுநாள் வரையில், என் சிற்றன்னை இறுதிப்பயணத்தில் சென்ற வண்ணம் இருப்பதைக் கண்டு கண்டு குமுறியபடி இருந்தேன்-இறுதியும் நடைபெற்றுவிட்டது. நாவலரும், நடராசனும், கருணாநிதியும், சத்தியவாணியும், அலமேலு அப்பாதுரையும் பிறரும், நமது கழகத் தோழர்கள் அனைவரும், என் உடனிருந்து ஆறுதல் கூறினர். எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராம சாமி, எஸ். எஸ். இராசேந்திரன், சிவாஜி கணேசன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் வந்திருந்தனர் — இருபத்தியோரு நாட்கள், நான் காஞ்சிபுரத்தில் தங்கி னேன் — என் வாழ்க்கையில், அதற்கு முன்பு நான் கண்டறியாத ஓர் வேதனையால் தாக்கப்பட்ட நிலையில். மனிதத்தன்மையை இழந்துவிடாத எவரும், இந்த என் நிலைகண்டிரங்குவர்—ஆனல் அரசியல் எதிர்ப்புணர்ச்சி காரணமாகச் சிலர் — தமது நிலையைக்கூட மறந்து— நான் பரோலில் வந்ததைக் கேலி செய்து பேசியதை யும் பத்திரிகையிலே கண்டேன், அரசில்துறை இத் தகைய காட்டு உணர்ச்சிகளையா தூண்டிவிட வேண்டும். அரசியல் பகையுணர்ச்சியைக் காட்டிக் கொள்ள, பண்பிழந்து, மனிதத்தன்மை இழந்தா, பேச முற்படவேண்டும். என்னையோ என் கழகத்தையோ, கண்டிக்க வேறு வழியே இல்லையா — முறையே கிடை யாதா! சிற்றன்னையை இழந்து நான் தவித்துக்கிடக்கும் போது, குடும்பத்தாருடன் இருந்து துக்கத்தைப் பங்கிட்டுக்கொள்ள, பரோலில் சென்றது, நியாயத் திற்கு அப்பாற்பட்டதா! பெரும் காங்கிரஸ் தலைவர்கள் பரோலில் சென்றது இல்லையா! பல்வலிக்காக பரோலில் சென்றவர்கள் எனக்குத் தெரியும். பண்பிழந்து பேசின சிலருக்குத் தெரியாதிருக்கலாம். அரசியல் துறையில் இத்தகைய அநாகரிகம் புகக்கூடாது என்பதற்காகவே இதுபற்றி எழுதுகிறேன். இருபத்தியோரு நாட்கள் பரோல் என்ருல், என் தண்டனைக் காலத்தில் இருபத்தி யோரு நாட்கள் குறைந்துவிடும் என்று பொருள் அல்ல —அந்த இருபத்தியோரு நாட்கள், நான் சிறையில் இருந்துவிட்டு வரவேண்டும். இனும் பெறவில்லை, இருபத்தியோரு நாட்களை; கடனாகப் பெற்றேன், திருப்பித் தந்தாகவேண்டும். எத்தனை இழிமொழி, கேலி மொழி இதற்கு! இதைக் காரணம் காட்டியா தேர்தலில் வெற்றிபெற வழி தேடுவது. அவ்வளவு வக்கற்றுப் போன நிலை வந்துவிட்டதா! அவ்வளவு வறண்டுபோய் விட்டதா, நெஞ்சத்தின் ஈரம்; நேர்மை; பண்பு. எண்ண எண்ணத் திகைப்பாக இருக்கிறது. கள்ளநோட்டு வழக்கிலே சிறை புகுந்தவர்கள், இரண்டு மாதங்கள் 'பரோல்' பெறுகிருர்கள், குடும்ப, வியாபார விவ காரத்தைக் கவனிக்க—இந்த அரசில் — என் சிற்றன் னையின் மறைவுக்காக நான் 'பரோல்' பெற்றதைக் கண்டிக்க, கேலி பேச, ஆட்சிப் பொறுப்பிலே உள்ள வர்களுக்கு, மனம் வருகிறது, அத்தகைய பேச்சை, அரசியல் பேச்சு என்றும் அவர்கள் கருதுகிருர்கள். எவ்வளவு தரம் கெட்ட நிலைக்கு வந்துவிட்டது அரசி யல்!! அரசியலா! அல்ல! அல்ல! அதிலே இலாபம் காணும் போக்கினர், அவ்வளவு தரம் கெட்ட நிலைக்கு வந்துவிட்டனர்.

மருத்துவ மனைக்கு நான் சென்றதுகூட, மாலை நேரப் பேச்சுக்கு இந்த மகானுபாவர்களுக்குப் பயன் பட்டுவிட்டது.

என் இடத்தோளில் ஏற்பட்ட வலி, இன்னும் அடியோடு போய்விடவில்லை-எளிதாகவும் போய்விடாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். வலக்கரத்தைத் தூக்கும் அளவுக்கு. இடக்கரம் தூக்க வராது; ஒருவித மான பிடிப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது-ஆர்தர்டிஸ் என்று பெயர் கூறுகிருர்கள். இடத்தோளில்; எலும் புக்கும் சதைக்கும் இடையில், உள்ள மெல்லிய பாகம்; தடித்துப் போய்விடுவதால், கை, தூக்குவதிலே, இடை யூறு ஏற்பட்டுவிடுகிறது. ஏன் தடித்துப் போகிறது? மருத்துவ நூலில், விளக்கம் இல்லை. வயதானல் தடித் துப் போகலாம்-குளிர்காற்றின் வேகம் தாக்கித் தாக் கித் தடித்துப் போகலாம்-இவைகளெல்லாம், காரணங் களாகக் காட்டப்படுகின்றன-இதுதான் காரணம் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுவதற்கில்லை. அதைப் போலவே, இதனைப் போக்க, திட்டவட்டமான முறையும், உடனடியான பலன் தரத்தக்க மருந்தும் இல்லை. இது அடியோடு நீங்க, மாதக் கணக்கில் ஆக லாம், வருடக் கணக்கும் ஆகலாம்—இதற்குச் செய்யக் கூடியதெல்லாம், பிடிப்பு ஏற்பட்டுள்ள இடத்தில், மின் சாரத்தின் மூலம், 'ஒத்தடம்' கொடுப்பது; விடாமல், தேகப் பயிற்சி செய்வது; வலி தெரியாதிருக்க மாத்தி ரைகள் சாப்பிடுவது, இவைகளே. இப்போதும், எனக்கு அந்த வலியும் இருக்கிறது; தூக்கும் நிலையில் பிடிப்பு இப்போதும் இருக்கிறது. வலி மிக அதிகமாக இருந்த துடன், வலக்கரத்துக்கும் வலி படை எடுத்த நிலை பற்றி, குறிப்பிட்டேன் அல்லவா; அது கண்டுதான் நான் அச்சம் கொண்டேன். பொதுவாக இடப்பக்கம், தோளோ, கரமோ, வலி எடுக்கிறது என்ருல், இருதய சம்பந்தமானதாக இருக்கக்கூடும்; அப்படியா, அல்லது

விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செச், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப் பிட்டு எழுதவும்.

Proprietor:
"KANCHI"
L. Kancheepuram.

வேறுவிதமா என்பதைக் கண்டறியும் சாதனம், சிறை மருத்துவ மனையில் இல்லை. அதனாலேயே, நான் சர்க்கார் மருத்துவ மனைக்குச் செல்ல விரும்பினேன், மருத்துவ மனைக்குச் சென்றுவிட்டால், சிறையில் இருப்பது போன்ற கட்டுக்காவல் இருக்காது, சிட்டுப் போலச் சிறகடித்துப் பறக்கலாம் என்பதால் அல்ல. சிறையில் இரவு மட்டும்தான், தனி அறை! மருத்துவ மனையில் 24 மணி நேரமும், தனி அறை—போலீஸ் காவல். ஒருவரிடமும் பேச அனுமதி கிடையாது, பார்க்க வருபவர்கள், மாலை 4 மணியிலிருந்து 6 மணிக்குள், சர்க்கார் மருத்துவ மனை பெரிய அதிகாரியின் அனுமதி பெற்று வந்து போகலாம். எப்போதும் எட்டு, ஆறு, நாலு, என்ற அளவில் போலீஸ்காரர், அறைக்கு எதிரே, காவல். நான் இருந்த பகுதியில் பணியாற்றும் மருத்துவர் தவிர, அதே மருத்துவ மனையில் வேறு பகுதியில் பணியாற்றும் மருத்துவர், வந்தால்கூட, போலீசார் விடுவதில்லை. அவ்வளவு கண்டிப்பு, அத்துணை கண்காணிப்பு. இந்த நிலையில் மருத்துவ மனையில் இருந்தேன்-நான் ஏதோ மருத்துவ மனையில், விழாக் கோலத்தில் விருந்து சாப்பிட்டுக்கொண்டு இருப்பதுபோல எண்ணிக்கொண்டு, பேசிவந்தனர், கழகத்துக்கு மாசு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, எவ்வளவு மட்டமான முறையையும், நேர்மையற்ற போக்கையும் மேற்கொள்வதிலே வல்லவர்கள்.

எனக்கு ஏற்பட்ட வலியின் தன்மையைக் கண்டறிய, சிறையிலுள்ளவர்கள் துளியும் முயற்சி எடுக்காததைக் கூறினேன், நாவலரிடம். அவர், சாக்கார் பெரிய அதிகாரியிடம் பேசி இருக்கிறார்; அந்த அதிகாரி சர்க்கார் மருத்துவ மனை தலைமை மருத்துவர் திரு. இரத்தினவேலு சுப்ரமணியம் அவர்களை, சிறைக்குச் சென்று என்னைப் பார்த்து வரச் சொல்லி இருக்கிறார். மருத்துவர் என்னை வந்து பார்த்துவிட்டு, மருத்துவ மனையில் வைத்துத்தான் வலியின் தன்மையைக் கண்டறிய வேண்டும் என்று கூறிடவே நான் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டேன். டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம், டாக்டர்நடராசன்,டாக்டர்சத்தியநாராயணா ஆகிய மூவரும், என் வலி போக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். முதலில் வலி எதனால் என்பதைக் கண்டறிய பல்வேறு பரிசோதனைச் செய்தனர். இதயத் துடிப்புகளைப் படமாக்கும் மின்சாரக் கருவிகொண்டு பார்த்ததில் இருதய சம்பந்தமான கோளாறு எதுவும் இல்லை என்பதைக் கண்டறிந்து கூறினர். பிறகு பல், வாய், காது, இவைகளிலே ஏதேனும் கிருமிகள் உள்ளனவா, என்று ஆராய்ந்தனர். எனக்குள்ள வலி, பெரி-ஆர்திரிடிஸ்-என்பதாகும் என்று முடிவாயிற்று. மின்சார ஒத்தடமும், முறையான தேகப்பயிற்சியும் அளிக்கப்பட்டன. டாக்டர் நடராசன், எலும்பு சம்பந்தமான கோளாறுகளைச் சரிப்படுத்தும் நிபுணர். நமது எம். ஜி. ராமச்சந்திரனுக்கு, கால் எலும்பு முறிந்திருந்த போது மிகத் திறமையாகக் கவனித்து எந்தவிதமான ஊனமும் ஏற்படாமல், எம். ஜி. ராமச்சந்திரனை எழுந்து நடமாட வைத்தவர் இதே டாக்டர் நடராசன் அவர்களே இளம்பிள்ளை வாதத்தால் வதைபடும் குழந்தைகளுக்கான சிகிச்சை முறையை, நேர்த்தியாக அமைத்து மிகுந்த அக்கரையுடன் கவனித்து வருகிறார். இந்தத் துறையில், மற்ற எந்த மருத்துவ மனையையும் விட, சிறப்பானதாக, இங்கு அமையவேண்டும் என்பதிலே, டாக்டர் நடராசன் மிகுந்த அக்கரை கொண்டுள்ளார். என் வலி போக்க அவர் துவக்கிய மின்சார சிகிச்சை முடிவடைய ஒருவாரம் இருக்கும்போது, அவர் அறுவைத் துறை நிபுணர்களின் மாநாட்டிலே கலந்துகொள்வதற்காக, கல்கத்தா புறப்பட்டார். மறுநாளே தான், நான் காஞ்சிபுரம் செல்லவேண்டி ஏற்பட்டு விட்டது.

டாகடர் இரத்தினவேலு சுப்ரமணியம் மருத்துவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பவர்—ஆழ்ந்த அறிவுத் தெளிவும், மிக அமைதியான இயல்பும், நோயாளிகளிடம் கனிவும் காட்டும் இவருடைய பார்வையும் பேச்சுமே, மருந்தாகிவிடும். எப்போதும் ஓர் புன்னகை தவழும் நிலையில் இருப்பவர். மிகுந்த நகைச்சுவையுடன் பேசுபவர். என்னுடைய உடற்கூறு அவருக்குக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே நன்கு தெரியும். சில திங்களுக்கு ஒருமுறை அவரிடம் சென்று என் உடல் நிலைபற்றிக் கூறி, மருந்து பெறுவது வாடிக்கை —பத்து ஆண்டுகளாகவே. அவருடைய தனியான கவனிப்பு எனக்குக் கிடைத்ததுகண்டு நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன், எனக்கு வந்துற்ற, பெரி ஆர்த டிஸ்சின் இயல்புபற்றி அவர் கூறியபிறகு, எனக்கு வலி

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

கண்டவுடன் ஏற்பட்ட குழப்பமும் அச்சமும் வெகுவாகக் குறைந்துவிட்டது. தொடர்ந்து 'ஒரு பத்து நாள் அங்கு நான் இருந்திருக்கவேண்டும், ஆனல் இடையில் என்னைத் தாக்கிய வேதனை, இருபத்தியொரு நாட்கள், மருத்துவமனையில் நான் இருப்பதற்கு முடியாத நிலையை உண்டாக்கிவிட்டது. காஞ்சிபுரத்தில், என் சிற்றன்னைக்கு ஏற்பட்ட நோய் தீர, வழி இல்லை என்ற போதிலும், என் மனதுக்கு ஆறுதல்தர, உடனிருந்து, பல்வேறு சிகிச்சை முறைகளைக் கையாண்டுபார்த்து, கடைசி விநாடிவரை, இருந்துவந்த டாக்டர், ராமமூர்த்தி என்பவர், நான் காஞ்சிபுரத்தில் தங்கி இருந்த நாட்களில், என்னையும் கவனித்துக்கொண்டார். இதயத்தில் பலமான அடி விழுந்துவிட்டநேரம், எனவே, என் கை வலி எனக்கு அப்போது நினைவிலே நிற்கக்கூட இல்லை. சில நாட்கள் ஆயுர்வேத முறைப்படி, மருத்துவர் தங்கப்பன் என்பவர், என் வலி போக்கமுயன்ருர். போதுமானகாலம் கிடைக்கவில்லை. என் சிற்றன்னை தழலில் கிடத்தப்பட்டு, சாம்பலாயினுர்கள்—நான் செயலற்ற நிலையில் உழன்றுகிடந்தேன். 'பரோல்' முடிந்தது, பரிமளத்துடன் சென்னைவந்து, வழக்கறிஞர் நாராயணசாமி இல்லத்தில் உணவருந்திவிட்டு, நாவலர் நடராசன் கருணாநிதி ஆகியோரிடம் சிறிதுநேரம் பேசிவிட்டு, 16-ந் தேதி மாலை, மீண்டும், சென்னை மத்திய சிறைக் கோட்டம் நுழைந்தேன்.

இம்முறையேனும், என்னை நண்பர்கள் உள்ள பகுதிக்கு அழைத்துச் செல்வார்கள் என்று எண்ணிக்கொண்டே, உள்ளே நுழைந்தேன்—சிறை அதிகாரிகள் என்னை, பழய இடத்துக்கே அழைத்துச்சென்றனர். பழய இடம், புதிய நிலையிலும் இருந்திடக் கண்டேன் — என்னேடு தேவக்கோட்டையாரும் இஸ்லாமியப் பெரியவரும் இருந்தனர் அல்லவா — அவர்களும் அங்கு இல்லை; நான் உள்ளே நுழைகிறேன், தேவக்கோட்டையார் வெளியே போகிருர்! இஸ்லாமிய நண்பர், மருத்துவமனை சென்றுவிட்டதாக அறிந்தேன். ஆக அன்று இரவு எட்டு அறைகள்கொண்ட அந்த விடுதியில் நான் மட்டுமே — பணியாற்ற அமர்த்தப்பட்ட கன்னியப்பன் என்ற ஒருவர், என் வேண்டுகோளின் பேரில், பக்கத்து அறையில் இருக்க அனுமதிக்கப்பட்டது. வெறிச்சோடியமனம்! வெறிச்சோடிய இடம்! அன்று இரவு தங்கி இருந்தேன் — மருத்துவர் முன்பே தெரிவித்திருந்ததற்கிணங்க, சிறை அதிகாரி, காலையில், என்னை அழைத்துக்கொண்டுபோய், மீண்டும் மருத்துவமனையில் சேர்த்தார்—வழக்கமான போலீஸ் காவல்—பகல் இரவு எந்த நேரமும் அறைக்குள்ளே இருந்து தீரவேண்டியநிலை—மாலையில் மருத்துவமனை பெரிய அதிகாரியின் அனுமதிபெற்று, என் துணைவியும், மகனும் வந்துபார்ப்பது என்ற பழய ஏற்பாடு—வெளிச்சுச்செல்ல, குளிக்கச்செல்ல என்ருல்கூட, பலத்த போலீஸ் காவல்—மிகப்பெரிய சமூகக்கேடான குற்றம்புரிந்து, வாய்ப்புக்கிடைத்தால் ஓடிவிடக்கூடிய கெடுமதிகொண்ட குற்றவாளிகளுக்கென அமைந்திருந்த அமுல், முறை யாவும், மொழி காத்திடும் தூய நோக்குடன் அறப்போரில் ஈடுபட்டு, சிறைபுகுந்த எனக்கும்! ஏனே இந்தப் பொருளற்ற போக்கு! சிறைக்கொடுமைகளைத் தாமே கண்டவர்கள், காங்கிரசார்—அவர்கள் நடத்தும் ஆட்சியில், சிறைக்கொடுமை நீக்கப்படவில்லை — சிறை நிலைமையை மருத்துவமனையிலும் புகுத்தி இருந்தார்கள். சிறையிலாவது பகலெல்லாம், சிறிதளவு நடமாடலாம், சிலருடன் உரையாடலாம்—மருத்துவமனையில், பகலிலும் சரி இரவிலும் சரி, ஒரு அறைக்குள் அடைபட்டுக்கிடக்கும்நிலை, சேலம் மாவட்டம் வேலூர் தோழர் சிவப்பிரகாசம் எனக்கு நீண்ட பல ஆண்டுகளாக நண்பர்—அவர் அறுவை சிகிக்சை பெற்றுக்கொண்டு, நான் இருந்த இடத்தில் வேருேர் அறையில் படுத்திருந்தார். அவரைச் சென்று பார்க்கக்கூட அனுமதி இல்லை. அவர் இங்கு வந்து பார்க்கவும் அனுமதி இல்லை. அவர், மருத்துவமனையிலிருந்து உடல்நலம் பெற்று வீடு ஏகும் நாள், என் அறைக்குள் வந்து, இரண்டொரு நிமிடங்கள் பேசிவிட்டு, போலீசார் மேற்கொண்டு கெடுபிடி செய்வதற்கு முன்பு சென்றுவிட்டார். அவ்வளவு கண்டிப்பான முறையிலே, காவல் இருந்துவந்தது. இதனை அறியாமலோ, அறிந்தும் வேண்டுமென்றே, அரசியல் மாச்சரியம் காரணமாகச் சிலர், மருத்துவமனையில் நான் தங்கி இருந்ததை ஏதோ மணவிழா மன்றலில் தங்கி இருந்தது போல எண்ணிக்கொண்டு, ஏசிப் பேசினர். சிலருக்கு உள்ளம் அப்படி இருக்கிறது!! மாலைவேளைகளில் ராணியும் பரிமளமும், என் பெரிய மருமகப் பெண்ணும் வருவார்கள் — அவர்களுக்கு என்னைக் காண்பதால் ஒரு விதமான மனநிம்மதி—எனக்கும் அவ்விதமே. ஆனல், 'தொத்தா' பற்றிய நினைவு வந்துவிடும்—வேதனை மீண்டும் தேளாகிக்கொட்டும். இந்நிலையில் இருந்துகொண்டு மீண்டும் மின்சார சிகிச்சை பெற்றுக்கொண்டு வந்தேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

13-10-64

அந்திக் கலம்பகம்

"பொன்னி! நீ சொன்ன ரூபாவதி கதையைக் கேட்டு எங்களவர் விழுந்து விழுந்து சிரித்தார்."

"உங்களவர் சிரித்தாரா! இந்தக் கதையைக் கேட்டுவிட்டு கோபம் கோபமாகக் கிளம்பினுர் கோடி வீட்டு குப்பண்ணு, அவருடைய மனைவியை அடிக்க."

"விளங்கவில்லையே, பொன்னி! குப்பண்ணுவுக்கு ரூபாவதி கதையைக் கேட்டுக் கோபம் வந்ததா... சரி......அதற்காக மனைவியை ஏன் அடிக்கணும்..."

"ஏமு! இந்த குப்பண்ணு எப்போதாவது எங்க வீட்டுக்கு வருவார், ஐந்து பத்து கடன் கேட்க...நேற்று அதுபோல வந்திருந்தார்.....ஆனுல் கடன் கேட்க அல்ல — திருப்பிக் கொடுக்க..."

"ஆமாம், பொன்னி! இந்த குப்பண்ணுவுக்கு என்ன வேலை...?"

"ஒரு குறிப்பிட்ட வேலைன்னு கிடையாது. கலியாண காலங்களிலே, பெண் பார்த்துக் கொடுப்பார்; தேர்தல் சமயத்திலே ஓட்டு வாங்கிக் கொடுப்பார்; பொதுவாக தரகு வேலைன்னு சொல்லணும்..."

"அது ஒரு நிலையான வருமானத்தைக் கொடுக்குமா என்ன....கஷ்ட ஜீவனந்தான். சரி, கடனைத் திருப்பிக் கொடுக்க வந்தார்..."

"ஆசாமி, தடபுடலா இருந்தார்— புது சட்டை — வேட்டி — கைகடியாரம்—விரலிலே மோதிரம்-இப்படி. அண்ணேன்! என்ன ஏதாவது பெரிய இலாபம் கிடைச்சுதான்னு கேட்டேன். ஏதோ பகவானுடைய தயவாலே, வருமானம் கொஞ்சம் வளம்தான்.....இனி நிம்மதியாகவே வாழ முடியும் என்கிற நம்பிக்கையும் ஏற்பட்டிருக்குது என்று சொன்னுர்."

"போகட்டும், பாவம்! மனஷன் கஷ்டப்படாமலிருந்தா, சரிதான்..."

"விவரம் கேட்டா சொல்லுவாரா, குப்பண்ணன். ஜாடைமாடையாத் தான் பேசினுர், ஆனு எனக்கு விஷயம் விளங்கிவிட்டுது. ஆசாமி திருட்டுச்சரக்கு விற்கற வேலையிலே இறங்கிவிட்டிருக்கிருர்..."

"பாரேண்டி அக்ரமத்தை! நாணயமாக நடப்பவன் திண்டாட வேண்டியது; அக்ரமம் செய்கிறவன் ஆடம்பரமா வாழ வேண்டியது..."

"திருட்டு சரக்குன்னு, பொன்னி! சிலோன், சிங்கப்பூர் இவ்விடமிருந்து கள்ளத்தோணியிலேவருதே அந்தச் சரக்கா?"

"உனக்கு எப்படி பட்டு! தெரியும் அந்த விவரம்..."

"எத்தனையோ வழக்கு வருதல்லவா அதனாலே தெரியும்..."

"பட்டு! நீ சொல்கிறபடியாத்தான் இருக்கணும். என்னையே கேட்டாரே குப்பண்ணன், ஏம்மா! உனக்கு நல்ல நைலான் வேணுமான்னா சொல்லு, ஒரு இடத்திலே இருக்குது கொண்டு வருகிறேன்னு..."

"ஏண்டி பொன்னி! இந்தமாதிரி ஆசாமிகள் பிடிபடுவதில்லையா...... சர்க்கார் என்ன செய்துகொண்டிருக்குது..."

"அடிக்கடி வருதே பேப்பர்லே, இப்படிப்பட்ட ஆசாமிகள் பிடிபடுகிற செய்தி..."

"ஏமு! பட்டு சொல்வதுபோல, சிலபேர் பிடிபடுவது உண்மைதான். ஆனா, எப்படிப்பட்டவங்க பிடிபடுகிருங்க தெரியுமா சின்ன மீன்கள் தான்! வலையைப் பிய்த்துக்கொண்டு தப்பிவிடுது பெரிய பெரிய திமிங்கிலங்கள்..."

"தங்கக் கட்டிகளைக் கடத்திக் கொண்டு போகிறவர்களைக் கண்டு பிடித்து அடக்கினா, நாட்டுக்கு எத்தனையோ விதமான நன்மை கிடைக்கும்."

உண்மைதான்! ஆனா அப்படிப்பட்ட கள்ளக்கடத்தல் பேர்வழிகள் பெரிய புள்ளிகளா இருக்சும்போது -ஆளுங்கட்சியையே அவர்களாலே வலையிலே போட்டுக்கொள்ள முடியுது."

"அடிக்கடி இவ்விதமான செய்தி வெளிவருது ஏமு! ஒரு மந்திரியோட மகனே, தங்கக் கள்ளக் கடத்தல் தொழிலிலே சம்பந்தப்பட்டிருப்பதாக, வெளிப்படைபாகவே பேச்சு வந்தது."

"அப்படிப்பட்ட பெரிய ஆசாமிகளைப்பிடித்துத்தண்டனை கொடுத்தா மத்தவங்களுக்கு பயம் ஏற்படும்..."

"அதற்குத் திறமையும் நேர்மையும் நிறைய வேண்டுமே ஏமு! நம்ம சர்க்காருக்கு எங்கே இருக்குது– வால்காட் என்கிற அமெரிக்காக்காரன், கள்ளத்தனமான வியாபாரம் செய்துவிட்டு. நம்ப சர்க்காருடைய கண்களிலே மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, ஓடிவிட்டான்...பிடிபடவில்லையே..."

"வால்காட் விஷயம், பொன்னி! உள்ளபடி நம்ம சர்க்காருக்கு கேவலத்தை உண்டாக்குகிற விஷயம். விமானத்திலே வருகிருன். விபரீத காரியம் செய்கிருன், விமானத்திலேயே திரும்பிப் போகிருன்."

"சர்க்காருடைய கையிலே பிடிபடாமலே..."

"ஆமாம் ஏமு! பார்லிமென்டிலே கூட, பலபேர் கேள்வி கேட்டார்களே. பேப்பர்லே வந்ததே..."

"இப்ப அந்த வால்காட் எங்கே இருக்கிருன்..."

"துப்பறியும் இலாகா இன்னமும் வால்காட் இருக்கிற இடத்தைக் கண்டுபிடிக்கிற முயற்சியிலேதான் ஈடுபட்டிருக்குது. சட்ட இலாகா அவன்மீது நடவடிக்கை எடுக்க என்னென்ன முறைகளைக் கையாளலாம்னு யோசித்துக் கொண்டிருக்குது."

"ஆனா, நடக்கற பகற் கொள்ளை நடந்தபடி இருக்குது. அக்ரமம்டி பொன்னி!"

"பொன்னி! குப்பண்ணா விஷயத்தை விட்டுவிட்டயே..."

"குப்பண்ணாவிடம் பக்குவமாகப் பேசிப் பார்த்தபோது, மற்றொரு விஷயமும் தெரிஞ்சுது. குப்பண்ணா காங்கிரசிலே சேர்ந்துவிட்டாராம்."

"இப்படிப்பட்டவங்க, காங்கிரசையும் ஏமாத்தி விடுகிருங்க..."

"காங்கிரசு கட்சியைக் குறை கூறினா, குப்பண்ணாவுக்கு முகமே சிவந்து போகுது ஏமு! பொதுவான விஷயந்தானேன்னு, நான் ரூபாவதி கதையைச் சொன்னேன். ஒரே கோபம் குப்பண்ணாவுக்கு..."

"பணத்தோட மதிப்பைப் பாழாக்கிவிட்ட ஆட்சியாக இருந்தாலும், தனக்கு வேண்டிய கட்சி நடத்துகிற ஆட்சி என்பதாலே குப்பண்ணாவுக்குக் கோபம்போல இருக்கு. அது சரி. கதை சொன்னது நீ. அதற்காக குப்பண்ணன் அவன் மனைவியிடம் கை நீட்ட காரணம்?"

"இதென்ன கேள்வி ஏமு! நம்ம நாட்டு ஆடவர்களிலே பெரும்பாலானவர்களுக்கு இதுதானே சுபாவம், வாடிக்கை. யார்மீது கோபம் ஏற்பட்டாலும், அந்தக் கோபத்தைக் கொண்டுபோய், தன் மனைவிமீது காட்டுவதுதானே அவர்களுக்குப் பழக்கம். அந்த முறையிலேதான் குப்பண்ணாவும் நடந்துகொண்டது..."

"குப்பண்ணாவாவது சாதாரண ஆள். குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்துக் கொடுமை செய்வதாக ஒரு மந்திரி மீதே வழக்கு கிளம்பி இருக்குதே..."

"படித்தவர்னு பட்டம் இந்த இலட்சணத்துக்கு மந்திரிப் பதவி வேறே, இப்படிப்பட்ட ஆளுக்கு..."

"இப்ப மந்திரியாக இல்லை. விரட்டி விட்டார்கள்..."

"பெண்களைக் கொடுமை செய்கிற ஆசாமிகளை, எந்தவிதமான பதவியிலேயும் அமர்த்தக்கூடாது என்று சட்டமே போடணும்."

"வரும்! வரும்! பெண்களுக்கு வெகுகாலத்துக்கு முன்னேயிருந்து இருந்து வருகிற கொடுமைகளை ஒழிக்க, வரிசையாகப் புதுப்புது சட்டங்கள் வந்து கொண்டுதானே இருக்குது..."

"எனக்கு என்ன தோணுது தெரியுமா பொன்னி! சமூக சீர்திருத்தத்துக்கென்றே ஒரு மந்திரி இருக்கணும். அதற்கென்று ஒரு தனி மந்திரி இருந்தாத்தான், வேலை, வேகமாக நடக்கும்."

"அந்த மந்திரியும், பெண்ணாக இருக்கணும்டி பட்டு! பெண்களாலே முடியாதா, அரசாள..."

"ஏன் முடியாது! இப்பமட்டுமில்லா ஏமு! பழயநாட்களிலே கூட பெண்களோட அறிவு ஆற்றல், பல காரியங்களைச் சாதிக்க உதவிற்று என்று வரலாறு இருக்குதே..."

"வரலாறுன்னு பட்டு சொல்லவே நினைவு வந்தது. ஏமு! ஒரு சம்பவம் நடந்தது வெகு காலத்துக்கு முன்னே. ஒரு அரசன் ஒருநாட்டின் பேரிலே படை எடுத்து, பிடித்து விட்டான. வலுத்தவன் வைத்தது தானே அந்தக் காலத்திலே சட்டம் ...."

"அந்தக் காலத்திலே மட்டும் என்ன பொன்னி! இந்தக் காலத்திலேயுந்தான் அது சட்டமாகவும் திட்டமாகவும் இருக்குது..."

"நான் இல்லைன்னு சொல்லல்லே ஏமு! ஆனா இந்தக காலத்திலே, வலுத்தவன் ஒரு அக்ரமம் செய்தா, வேறு நாட்டின் பேரிலே படை எடுத்தா, இது அக்ரமம் என்று கண்டிக்கவும், தடுக்கவும், பல நாடுகள் முன்வருகிற ஒருமுறை மெல்ல மெல்ல உருவாகிக்கொண்டு வருதல்லவா,.....அது ஒரு பெரிய மாறுதல்

தானே…நல்லதுக்குத்தானே அந்த மாறுதல்……"

"பொன்னி! கதையை விட்டு விட்டு, அரசியலுக்குள்ளே நுழைந்துவிட்டயே……"

"அக்ரமக்காரஞன அரசன் ஒரு நாட்டைப்பிடித்துவிட்டாஞ. என்ன செய்தான் தெரியுமோ? ஒரே நாசம்! கொள்ளை! தீவைப்பது! இப்படி. இது போதாதென்று, ஒரு விபரீத மான உத்திரவு போட்டான். பொழுது விடிந்ததும், அந்த நாட்டிலே உள்ள ஆடவர்களை எல்லாம், கிழவராஞலும் வாலிபராஞலும் குழந்தைகளாஞலும், வெட்டிக் கொன்றுவிடப்போவதாக உத்திரவு ………"

"அடப் படுபாவி! கொலைபாதகா! நாட்டைத்தான் நாசமாக்கிஞனே, கொள்ளை அடித்தானே; அத்தோடு விடக்கூடாதா…ஆண்களைப் பூண்டோடு அழிக்கவா :திட்டமிட்டான் ………?"

"ஆண்களைக் கொன்றுவிடுவது என்றும், பெண்கள் அந்த நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்பதும் உத்திரவு. பெண்களுக்கு இன்னொரு வரமும் கொடுத்தான். அந்தப் பெண்கள், தங்களுக்கு விருப்பமான ஏதாவது ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போகலாம் என்பது……"

"பெரிய புண்ய காரியம் செய்வதாக நினைப்போ அவனுக்கு? படு கொலை செய்யத் துணிந்துவிட்ட அக்ரமக்காரனுக்கு….சொல்லு! பிறகு என்ன நடந்தது?"

"என்ன நடந்ததாவா? பெண்கள் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டிஞர்கள்"

"எப்படி! எல்லோருமாகச்சேர்ந்து அவனை அடித்துக்கொன்றுபோட்டார்களா?"

"அப்படிச் செய்யலாம் என்று தான் உனக்குத் தோன்றும் எனக்குத் தோன்றும். அந்தப் பெண்கள் அறிவு மிகுந்தவர்கள். அரசன் கொடுத்த 'வரத்தை'ப் பயன்படுத்தியே, அவனுடைய அக்ரமத்தை அழிக்கத் திட்டமிட்டார்கள்…"

"அதைத்தான் கேட்கிறேன், அப்படி என்ன செய்தார்கள் அந்தப் பெண்கள் என்று……"

"பொழுது விடியும்போது பெண்கள் நாட்டைவிட்டுக் கிளம்பிவிட வேண்டுமல்லவா?"

"ஆமாம் போகும்போது ஒவ்வொருவரும் தனக்கு விருப்பமான ஏதாவது ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போகலாம் என்பது நிபந்தனை. அந்த நிபந்தனையை நீ, வரம் என்று சொல்லுகிருய்,"

"நாஞ சொல்லுகிறேன் 'வரம்' என்று; அந்த அரசன் சொன்ஞன். என்ன செய்தார்களென்ருல், ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆடவனைத் தங்கள் முதுகிலே வைத்து கட்டிக்கொண்டாள்…"

என்னது! என்னது! முதுகிலே, ஆடவர்களா…"

"ஆமாம்! விருப்பமான ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போகலாம் என்ருனல்லவா மன்னன்; எங்களுக்கு விருப்பமான பொருள், ஆடை ஆபரணமல்ல, பெட்டி பேழை அல்ல; ஆடவன்தான்! என்று கூறி, ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆடவனைத் தூக்கிக் கொண்டு கிளம்பிஞள், நாட்டை விட்டுச் செல்ல…"

"பலே! பலே! பாரேன் பொன்னி! அந்தப் பெண்களுடைய யுக்தியை"

"மன்னன் பார்த்தான். ஒரே வியப்பு. அவன் இப்படி நடக்கும் என்ரு எதிர்பார்த்திருப்பான். பெண்கள் கதறிக் கொண்டே, ஏதோ கைக்கு எட்டிய ஒரு பொருளை எடுத்துக்கொண்டு புறப்படுவார்கள்; அவர்கள் போனபிறகு ஆண்களை வெட்டிக் குவிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். பார்த்தாலோ, இப்படி இருக்கிறது. கேட்டான், இது என்ன? ஆண்களைக் கொன்றுபோட நான் உத்திரவு பிறப்பித்திருக்கிறேன்; நீங்கள் ஆடவர்களை எடுத்துக்கொண்டு போகிறீர்களே; இதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? ஆடவர்களைக் கொன்று போடுவது என்ற என் உத்திரவு என்ன ஆவது? என்றெல்லாம். பெண்கள் பதில் சொன்ஞர்கள, "அரசே! தாங்கள்தானே 'வரம்' கொடுத்தீர்கள்; ஒவ்வொரு பெண்ணும் தனக்கு விருப்பமான ஏதாவது ஒரு பொருளைத் தன்னேடு கொண்டு போகலாம் என்று. அதன் படிதான் எங்களுக்கு விருப்பமான பொருளை எங்களுடன் எடுத்துக் கொண்டு போகிருேம்; உங்கள் உத்திரவின்படிதான் நாங்கள் நடந்து கொண்டோம் என்று. என்ன செய்வான் மன்னன்? தன்னை அந்தப் பெண்கள், அறிவிஞல்தோற்கடித்து விட்டதை உணர்ந்தான்."

"உணர்ந்து? எல்லோரையும் வெட்டிப் போடு! என்று உத்திரவு பிறப்பித்தாஞ…"

"இல்லை ஏமு! எவ்வளவு கொடிய வஞக இருந்தபோதிலும், தங்கள் ஆடவர்களைக் காப்பாற்ற அந்தப் பெண்கள் எவ்விதமான யுக்தி செய்தார்கள் என்பதைப் பற்றி எண்ணி எண்ணி வியப்படைந்து, இப்படிப் பட்ட அறிவுள்ள பெண்களைக் கொண்டதாக உள்ள நாடு வாழ வேண்டும், உலகத்துக்கு அந்த நாடு வழிகாட்டத் தக்கது என்று கூறி, பெண்களை மன்னித்ததுடன், ஆடவர்களைப் படுகொலை செய்யும் திட்டத்தையும் நீக்கிவிட்டு, நாட்டை அவர்களிடம் ஒபபடைத்துவிட்டான்."

"பரவாயில்லையே! கடைசியில் அரசனே திருந்தியிருக்கிருன்."

"நாடு மீட்கப்பட்டது, நாசம் தடுக்கப்பட்டது; எல்லாம் பெண்களுடைய அறிவுத் திறமையால்…"

"இது எந்த நாட்டிலே நடைபெற்றது பொன்னி! வரலாரு? கட்டுக் கதையா?"

"வரலாறு என்றுதான் சொல்லுகிருர்கள்; ஆஞல் ஏமு! இதுவெறும் கட்டுக் கதையாகவே இருந்தாலும், இதிலே உள்ள பாடம், பெண்குலத்தின் பெருமையை விளக்குவது அல்லவா?"

"சந்தேகமா இதற்கு! இப்படிப் பட்ட அறிவு கொண்டவர்களாக இருப்பினும் பெண்களை இன்னமும் கேவலமாகத்தானே ஆண்கள் நடத்துகிருர்கள்."

"பம்பாயிலே, சட்டத்தைத் திருத்துகிருர்களே, தெரியுமா ஏமு! பெண்களிடம் வம்பு தும்பு செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கத் தக்கவிதமாக சட்டத்தைத் திருத்து கிருர்கள்."

"சட்டம் போடலாம் பட்டு! அதஞல் உன்போன்ற வக்கீல்களுக்கு வேலை கிடைக்கலாம்; ஆஞல் உண்மையான மாறுதல் ஏற்பட, மனம் மாறவேண்டும்; பெண்கள் படும் கஷ்டத்தை ஆண்கள் உணர வேண்டும்…"

"ஏமு! பெண்கள் படும் கஷ்டத்தை ஆண்கள் உணரவேண்டும்

207

அட்டைப்படம்

'கள்ள மார்க்கட்' இருக்கும் நிலைமையும், அதை ஒழிப்பதற்கான முயற்சியும் எப்படி உள்ளன என் பதைச் சித்தரிப்பது.

என்று சொல்கிருயே, அது மிகவும் பொறுத்தமான பேச்சு. இதே கருத் தினைக் கொண்டு, ஒரு திருவிழா நடக்கிறது தெரியுமா உனக்கு...''

"என்ன திருவிழா! சர்க்கார், ஒவ் வொன்றுக்கும் ஒருதிருவிழா கொண் டாடுகிருர்களே, அதுபோலவா?...''

"இது சர்க்கார் ஏற்பாடு செய்யும் விழாவுமல்ல; நம்முடைய நாட்டிலே நடப்பதுமல்ல. கிரேக்க நாட்டில், ஒரு பகுதியில், வருஷத்துக்கு ஒரு முறை 'மாதர் விழா' நடத்துகிருர் கள். அன்றையத்தினம் மட்டும், பெண்கள் எல்லோரும், வீட்டில் இருக்கமாட்டார்கள்; வீட்டுக் காரி யங்கள், சலமயல், குழந்தைகளைப் பராமரிப்பது, துவைப்பது அரைப் பது, குத்துவது புடைப்பது போன்ற ஒரு வேலையையும் பெண்கள்செய்ய மாட்டார்கள்; அன்று ஒரு நாள் மட் டும், அந்த வேலைகளை எல்லாம் அந்தந்த வீட்டு ஆடவர்கள்தான் செய்யவேண்டும்...''

"வேடிக்கையாக இருக்கிறதே பொன்னி! அப்படியா விழா நடக் கிறது. இப்போது கூடவா?''

"ஆமாம்! ஆண்கள் அடுப்படி யில் இருப்பார்கள், பெண்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பார்கள் வீட்டுக்கு வெளியே. விருப்பம்போல உலவுவார்கள்; விதவிதமான களி யாட்டத்தில் ஈடுபடுவார்கள்; வீடு வந்ததும், அவர்களுக்கு ஆடவர்கள் உணவளித்து உபசாரம் செய்ய வேண்டும்; குழந்தைகளைக் கவனித் துக்கொள்ள வேண்டும், பெண்கள் ஆண்களை அதட்டி வேலை வாங்கு வார்கள்; ஆண்கள் அடக்க ஒடுக்க மாக இருப்பார்கள்...''

பலே! பலே! பழிக்குப்பழி என்று சொல்...''

"ஆனுல் ஒரேநாள்! வருஷத்துக்கு ஒருநாள்!''

"ஒருநாள் என்ருலும் பொன்னி! அன்றையத்தினம் ஆடவர்கள் பெறுகிற பாடம், வருஷ முழுவதும் அவர்களை, பெணகளைக் கொடுமை செய்யக்கூடாது என்ற எண்ணத் தைத் தரும் அல்லவா?''

"அந்த நோக்கத்துடன்தான் மாதர்விழா நடத்தப்பட்டு வரு கிறது.''

"ஏமு! நாம், ஏன் அப்படி ஒரு விழாவை ஏற்பாடு செய்யக் கூடாது...?''

"பட்டு! அவன் வரட்டும் திரும்பி, உன்னை மணம் செய்துகொள்ள இருப்பவன், பிறகு அந்த விழாவை ஏற்பாடு செய்யலாம்...''

"எனக்காகவா சொன்னேன்; பொதுவாகச் சொல்கிறேன்...''

"பொன்னி! நீ சொன்ன திருவிழா உண்மையாக நடப்பதா, இல்லையா னுல், கட்டுக்கதையா...?''

. "உங்களவரிடமே கேட்டுப்பா ரேன்; இதுபோல திருவிழா நடக் கிறதா இல்லையா என்று...''

"அவரிடம் கேட்டால், ஒரே அடியாகக் கேலி பேசுவார்...''

"ஆமாம்! அவர் பாவம்! ஆபீசில் செய்கிற வேலையைவிட அதிகமாக வீட்டிலே செய்கிருரமே!''

"போக்கிரி! கேலியா செய்கிருய். நான் ஒண்ணும் புருஷனை ஆட்டிப் படைக்கிறவளல்ல. அதற்குத் தேவையான தளுக்கும் குலுக்கும் மினுக்கும், உனக்கு இருக்குது. என்ன பாடுபடப்போகிருனே, உனச்கு மாலைசூட்டப்போகிறவன்''

"கேலிபேச்சு வளருது பொன்னி, புறப்படு, போகலாம்.''

✽



காஞ்சிபுரத்தை அடுத்த தாமல் என்னும் ஊரைச் சார்ந்த பெரிய வர் திரு. சின்னு (நாயகர்) அவர் கள் (10—10—64) அன்று தமது 73-ஆவது வயதில் இயற்கை எய்தினுர்கள் என்பது கேட்டுப் பெரிதும் வருந்தினேம். சுயமரி யாதை இயக்கக் காலம் முதல் நம்மோடு இணைந்திருந்து தொண் டாற்றியவர் அவர். தாமலும் அதைச் சார்ந்துள்ள ஊர்களும் அறிவியக்கத்தில் நாட்டமும் ஈடு பாடும் கொள்வதற்குத் தோழர் சின்னு அவர்களின் தொண்டு துணையாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாள் முதல் அதில் தம்முடைய உழைப்பைச் செலுத்திவந்தார்.

உறுதியான மனமும், ஆழ்ந்த அநுபவமும் கொண்ட அவரால் பயனடைந்தவர்கள்பலர். வெறும் உழைப்பாளிகளாக இருந்த மக் கள் தங்கள் வாழ்க்கையில் உயர்வு பெறுவதற்கு அவர் வழி காட்டினுர். தாமல் கிராமம் எல்லா வகையிலும் நன்னிலை பெறுவதற்கு அவர் பாடுபட்டிருக் கின்ருர்.

அவரது மறைவால் வருந்தித் துயர் உறும் அவரது குடும்பத் தினர்க்கும் தாமல் ஊரினர்க்கும், உற்ருர் உறவினர்க்கும் நமது ஆழ்ந்த அநுதாபங்கள் உரித் தாகுக. —ஆசிரியர்.

சென்னை காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ; ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.